உ

ஸ்ரீ திரிபுரசுந்தரீசமேத ஸ்ரீ சந்திரமௌளீச்வராய நம:

# ஆர்யதர்மம்.

கும்பகோணத்தில் விளங்காநிற்கும் ஸ்ரீ காஞ்சீ காமகோடி
பீடாதிபதி யவர்களால் அனுக்கிரஹிக்கப் பெற்று
ஸ்ரீமடத்தின் ஆஸ்தானபண்டிதராகிய பிரம்மஸ்ரீ
வ. ஸ்வா. வெங்கட்டராம சாஸ்திரிகள்
அவர்களால் பத்திராதிபத்யம்
வகிக்கப்பெற்று நடைபெறும்
ஓர் தமிழ் வாராந்தப்
பத்திரிகை.

புஸ்தகம் 16.

கும்பகோணம்
ஸ்ரீ கோமளாம்பா பிரஸ்.
1932

# விஷய அட்டவணை.


| விஷயம் | பக்கம் |
|---|---|
| 1. நீதிவிளக்கம் (எல்லா ஸஞ்சிகையின் 1ம்பக்கத்தில்வருகிறது) | |
| 2, ஆர்யதர்மம் விஜயம் | 2 |
| 3. (a) அகில பாரதவர்ணுசிரமதர்ம ஸ்வராஜ்யசங்கத்தின் முதல் வருஷத்திய ஸபையின் அக்ராஸனர் சொற்பொழிவு | 3 |
| (b) அகில இந்திய வர்ணுச்ரமதர்ம ஸ்வராஜ்யசங்கத்தின் இரண்டாவது மூன்ருவது நாள் நடவடிக்கை | 10 |
| 4. ஆஹாரநியமம் | 13, 43, 54. 76, 113, 124 |
| 5. வாரவிருத்தாந்தம் 15 (எல்லா ஸஞ்சிகையின் கடைசிபக்கத்தில் வருகிறது.) | |
| 6. ஆத்மகுணங்கள் | 18, 34, 50, 74, 98 |
| 7. சேங்காலிபுரம் பிராமணமகாஸபை | 19, 70 |
| 8. ஜல்கான் சங்கத்தில் அக்ராஸனர் பிரஸங்கம் | 20 |
| 9, கன்மம் | 28, 36 |
| 10. மாகமாகாத்மியம் | 38 |
| 11. வைச்வதேவாகஸ்யம் | 39 |
| 12. காட்டுமன்னுர்கோவில் மகாஸபை | 45 |
| 13. வாசுதேவபிர்மேந்திரஸாஸ்வதிஸ்வாமிகளின் ஸித்தி வைபவம் | 58 |
| 14. ஓர் விக்ஞாபனம் | 65 |
| 15 வைதிகவிநோதஸம்பாஷணை | 86- 100, 128 |
| 16. பொன்மலை ராதாகல்யாணம் | 91 |
| 17. கோவில் வீரட்டானம் ஆர்யதர்மாபிவர்த்தனிமகாஸபை | 93, 153, 331 |
| 18. எட்டியாபுரம் ராமபஜனைமடம் | 116 |
| 19. புத்தகவாவு மதிப்புரை | 117 |
| 20. ஆயாஸமில்லாமை | 122, 218 |
| 21. வடமொழியின் நிலைமை | 137 |
| 22. ஓர் உபந்நியாஸம் | 141 |
| 23. நல்ல கார்யத்தில் ஆயாஸப்படலாம் | 146 |
| 24. மானிடப்பிறப்பும் மோக்ஷவிருப்பும் ஸத்குருவை அடைதலும் | 148 |

25. கீதாதிபாராயணம் 152
26: ஸ்னாதகதர்மம் 158
27. ஞானோபாயம் 162
28. அத்வைதமதம் அவைதிகமா ? 164
29. மங்களம் 170
30. அத்வைதமதம் அவைதிகம் என்பதைப் பற்றி மைசூர் ராஜதானியில் கூடிய ஓர் கண்டனக்கூட்டம் 172
31. அத்வைதமதம் அவைதிகமென்பது ஸரியா ? 175
32. ஓர் அறிவிப்பு 180
33. தத்வவிசார மார்க்கம் 181
34. கும்பகோணம் த்வைதாத்வைதவிசாரஸபா 183, 257.
35. தஞ்சை பிராம்மணமகாஸபைக்கு விக்ஞாபனம் 184
36. வைராக்யத்தின் விசேஷம் 186, 201
37. கார்ப்பண்யமில்லாமை 194
38. இது பெரியாரின் பெருமைக்கழகா ? 196
39. வேண்டுகோள் 206
40. உபந்யாஸச்சுருக்கம் 207
41. கோபக்கொடுமை or திரிபு 210
42. வரப்போகும் வருஷப்பெயர் 220
43. துவைத அத்வைத விசிஷ்டாத்வைதமதஸ்தர்களுடைய ஸன்னிதியில் ஓர் விக்ஞாபனம் 223
44. உபந்யாஸச்சுருக்கம் 226
45. கர்மவிருத்திக்ஷயரகசியம் 228
46. ஸம்பத்தை லக்ஷ்மியாகக் கருதுவது ஸனாதனதர்மம் 232
47. பெரியோர்களுக்கு விண்ணப்பம் 236, 243
48. தற்போது செய்யவேண்டியது 242
49. அத்வைதமும் வைதிகமும் 248.270, 316, 347, 366, 391, 411, 474, 491, 506, 534, 556, 619, 628, 676
50. ஸ்ரீப்ராப்தி or பொருளடைதல் 259, 291
51. தத்வவிசாரம் 266
52. ஹிந்துமதாபிமான சங்கம், நாகை 279, 683
53. ஸ்ரீராமநவமி உத்ஸவம் 280
54. கும்பகோணம்த்வைதாத்வைதஸபையின் முடிவுஎன்ன? 281
55. இதுதான் நல்ல வழி 281

56. ஸ்ரீகாமாக்ஷியம்பாள் தேவஸ்தானம் சங்கரஜயந்தி மகோத்ஸவ வேதாந்தஸபா பிரகடனப் பத்திரிகை 290
57. புராணவிமர்சம் தர்மமார்க்கம் 294
58. மதமும் மதஸ்தர்களும் 289, 329, 339
59. திரிமதஸ்தர்களுக்கு ஓர் விக்ஞாபனம் 301
60. புராணவிமர்சம் 305
61. காலத்திற்கேற்ற அறிவிப்பு 314
62. ஓர் நிவேதனம் 325
63. காட்டுமன்னார்கோவில் ஸ்ரீசங்கரஜயந்தி 327
64. சென்னை ஸ்ரீமடத்தில் ஸ்ரீசங்கரஜயந்தி 331
65. வைதிகவழியே நல்வழி 338
66. ஆஸ்திகதர்ம ஸர்வஜனசங்கம் 351
67. ஜம்புகேச்வரம் ஸ்ரீசங்கரஜயந்தி மகோத்ஸவம் 352
68. ஆசார்யசரித்திரசுருக்கம் 355, 378
69. புவனஞானம் 362
70. முகவுரை 364
71. ஸ்ரீசங்கரஜயந்தி வைபவமும் உத்ஸவமும் 370 to 374
72. ச்ருதிவிசாரம் 375
73. அத்வைதமதம் அவைதிகமென்பதற்கு ஓர்பிரத்யுத்தரம் 376
74. ஸநாதனதர்மஸம்ரக்ஷணஸபை 379, 388, 424, 435
75. சுத்தஸந்ததியே குலத்திற்கு மேன்மை 386
76. பிதிருக்கள் கடன் தீர்த்தல் 395
77. ஓர் விக்ஞாபனம் 400
78. விசித்திரவிசாரம் 400, 420
79. ஓர் ஸமரஸ வார்த்தை 406, 428
80. ஜாதிப்பிரிவினை 410
81. எனது வேண்டுகோள் யாது ? 418
82. ஓர் திருத்தம் 423
83. சிரௌதமே சிறந்தது 434
84. தஞ்சை ஆர்யதர்மபாடசாலா வர்ஷபூர்த்திகொண்டாட்டம் 447
85. பிரும்மண்யம் 448, 460
86. ஜாதிபேதமே ஸகஜம் 459
87. உத்திராதிஸ்வாமிகளுக்கோர் எச்சரிக்கை 461

88. பிரும்மனஸமூக கைங்கர்யம் 466
89. பிரும்மண்யசிறப்பு 468
90. தாய்பாகத்தின் உண்மை 471
91. ஸ்ரீசங்கரோபதேசரத்னம் 476
92. ஜன்மத்தால்தான் ஜாதிபேதம் 482
93. சிவாலயவிவாக விமர்சம் 484
94. ஓர் தூஷண தூஷணம் 494
95. வேதங்கள் பேதபராமா அபேதபராமா ? 500
96. அத்வைதிகளுக்கோர் விக்ஞாபனம் 505
97. அத்வைதஸபை 514
98. 34-வது தமிழ்மாகாண மகாநாடு 519
99. ஸம்ஸ்கிருதபாஷையின் அவசியம் 525
100. கலிகல்யாணகோலாஹலம் 530
101. மங்களவாதம்—ஓர் ஸமாதானம் 537
102. விச்வகீதார்த்தோபஸம்ஹாரம் 542, 558, 580, 604
103. ஸம்ஸாரத்தில் ஸுகலேசமில்லை 554
104. யாஜுஷோபாகர்மநிர்ணயம் 571
105. யாஜுஷோபாகர்மத்தில் ஓர் சங்கை 572
106. ஷை சங்கைக்கு ஸமாதானம் 573
107. புத்தகவரவு மதிப்புரை 574
108. புண்ணியாத்மாக்களிருப்பிடம் 578
109 கங்காவதாரணதத்வம் 589, 613, 718, 732,1093
110. யாஜுஷோபாகர்மத்தில் மற்றோர் சங்கை 592
111. முடிகொண்டானில் அத்வைதஸபா 595
112. ஸ்ரீவியாஸபூஜா சாதுர்மாஸ்ய மகோத்ஸவம் 600
113. பிர்மலோகத்தின் பெருமை 602
114. ஸ்ரீமத் அத்வைதஸபா ஸ்வாகதாநுமோதன பத்ரிகா 609
115. ஓர் வேண்டுகோள் 612
116. பவித்ரமானது காயத்ரிஜபம் 626
117. கர்மாவும் அதன் எல்லையும் 633
118. காயத்ரிஜபத்தில் மற்றோர் ஸந்தேகம் 635
119. நடேசஸ்துதி 635, 663, 715, 762, 807, 826, 871,1045
1056
120. சாதுர்மாஸ்ய வைபவம் 637

121. ஸ்வாகதபத்திரிகை 641
122. ஓர் கண்டனக்கூட்டம் 643
123. புராணவிமர்சம் 643, 652, 841
124. பிரும்மணன் பிழைக்கும் வழி 650
125. உலகாசாரவிளக்கமும், உத்ஸவமும் 655
126. தர்மஸாரம் 2 659
127. காயத்ரிஜபவிஷயம் 666, 692
128. ஓர் கண்டனக்கூட்டம், விளம்பரம் 670
129. சுருதிஸ்மிருதிபுராணங்களும் பிருமணுதிகளும் 674
130. ஓர் சங்கா ஸமாதானம் 678
131. ஆஸ்திகப்பெண்மக்களுக்கு 684
132. ஓர் விக்ஞாபனம், ஓர் விளம்பரம் 685
133. மோக்ஷமார்க்கத்திற்கிடையூறு 690
134. மாத்வாதசப்தார்த்த: 694, 816
135. காயத்ரிஜபவிசாரம் 697
136. குணதோஷங்கூறுபவர் எவர் ? 706
137. புருஷார்த்தக்ரமம் 708
138. ஓர் கண்டனக்கூட்ட விளம்பரம் 717
139. விக்ஞாபனம் 724
140. நம்பிக்கையே நலம் பயக்கும் 730
141. காயத்ரிஜபவிதி 741
142. ஸனுதன தர்மப்ரசாரம் 745
143. சாரதாசட்டக்கொடுமை 748
144. 1929-ளு இளைஞர் விவாகத்தடைச்சட்டசம்பந்தமாய்
ஸ்ரீரங்கம் வாஸிகளின் கண்டனத்தீர்மானங்கள் 751
145. தன்னையறியாதவனுண்டோ ? 754
146. சாரதாசட்டத்தைக் கண்டியுங்கள் 758
147. வேதலக்ஷணபண்டிதர்களுக்கு விக்ஞாபனம் 759
148. ஓர் வேண்டுகோள் 768
149. பெரியோருக்கு புத்தி சொல்லவேண்டுமா ? 774
150. சாரதாசட்டமசோதாக்கண்டனம் 775, 805
151. புண்ணியபூமி பாபிகளுக்கிடமாயிற்று 798
152. விவாகத்தில் விசேஷம் 800, 824
153. சாரதாநவாத்ரிமகோத்ஸவப்பத்திரிகை 813

154. புத்தகவரவு மதிப்புரை 814
155. வியவஹாரதசையில் ஸர்வமும் ஸமமாகுமா ? 822
156. சிறுவர்களுக்கான சிறுகதைக்கொத்து 831 (எல்லா ஸஞ்சிகைகளிலும் கடைசியில் வருகிறது.)
157. ஸத்காலக்ஷேபமும் ஆஸ்திகப்ரசாரமும் 834
158. ஸஜ்ஜனங்களின் சேர்க்கையே சிறந்தது 839
159. ஓர் விக்ஞாபனம் 840
160. வறுமை 851
161. ஸம்ஸாரவர்ணனம் 853, 876
162 தர்மதேவதையாவது தங்குமா ? 862
163. விவேகிகளுக்கு விக்ஞாபனம் 864
164. குறைவுடையோர் கூட்டம் 867
165 நரகசதுர்தசி 887
166. பாத்மவசனமென்னும் பதர்மொழியகற்றல் 888
167. கடவுள் 900
168. ஸூதபுராணிகர் 908
169. பக்திசெய்யப் பிறரைத் துவேஷிக்கவேண்டுமோ ? 910
170. மேல்நாட்டாரை பின்பற்றுபவர்களுடைய விபரீதங்கள் 912
171. விஷ்ணுஸஹஸ்ரநாமத்தின் விசேஷமஹிமை 916
172. மத்வாவதாராத்புதலீலா ரகஸ்யங்கள் 922, 945, 960, 994, 1008, 1032, 1061, 1086
173 புஸ்தகசாலைப்பயன் 926
174 பெரியோர் சொற்படி நடப்பது நலம் 934
175. தஞ்சைஜில்லா பிராமணஸபை 2-வது அப்தபூர்த்தி 935
176. விவேகம் 939
177 சுசீலர் 940
178. நம் ஜகத்குருவின் மனமார்ந்த உபதேசம் 949
179. விஷயாசை விடத்தக்கதே 958
180. தர்மராஜஸ்வாவிம்சதி 967
181. திருச்சி அத்வைதஸபாவில் நடந்த உபந்யாஸங்களின் சுருக்கம் 971, 984
182. பக்தியோகம் 973
183. வ்யாஸதாத்பர்யவிமர்சம் 975
184. மூத்தவனை மூலையில் தள்ளலாமா ? 982

185. ஸநாதனதர்மத்திற்கு அபாயம் 969
186. சீலம் சிறந்த ஸாதனம் 1006
187. தஞ்சைஜில்லா பிராமணஸபை, கும்பகோணம் 1012
188. கிருஹஸ்தாசிரமஸபை 1017
189. ஆஸ்திகாச்ரமம் 1018
190. ஹிந்துக்கள் -- ஆர்யர்கள் 1019
191. ஆசாரநிர்ணயம் 1020
192. பாடசாலைகளின் உபக்ரமம் 1020
193. ஸத்தியந்தான் ஜயிக்கும் 1030
194. செல்வர் கடமை 1043
195. புத்தகவரவு — மதிப்புரை 1048
196. பிறர் கார்யத்தைப் பார்ப்பவனே பெரியவன் 1054
197. தீண்டாமையொழித்தல் தைவஸம்மதமா ? 1078
198. ஸ்ரீபகவத்பாதவைபவம் 1080
199. ஆயுர்வேதம் 1084

முற்றிற்று.



ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள்.

ஸ்ரீ திரிபுரசுந்தரீசமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

ஸர்வப்பிராணிகளின் ஸர்வாபீஷ்ட ஸித்திக்கும் ஸநாதனதர்மமே காரணமென்று ஸகலப்பிரமாண நூல்களும் ஒரே தாத்பர்யமாகப் போதிக்கின்றன. இதில் நம்பிக்கையில்லாத சிலர், இஷ்டம்போலெல்லாம்நடந்து கொள்ள ஒவ்வொருவனுக்கும் உரிமையுண்டென்ற பிடிவாதத்தைத்தங் கோஷ்டியோடு மாத்திரம் நிருத்திக்கொள்ளாமல் ஈசுவராக்ஞாரூபமான பிரமாணநூல்களுக்குக்கட்டுப்பட்டே தீரவேண்டுமென்ற தீர்மானமுள்ளவர்களி—மும் செலுத்திவிடப்பார்க்கிறூர்கள். தர்மத்தை நம்பியிருப்பவர்களை அதில் நம்பிக்கையில்லாதவர் எப்படிமாற்றமுடியும்? தார்மிகர்களை மற்றவர்கள் மாற்றிவிடப்பார்த்தால் தார்மிகர்களும் அவர்களை மாற்றி நல்வழியில் கொண்டுவரவேண்டுமென்று நினைக்கமாட்டார்களா? ஒரே வழியையே நல்வழியாக எல்லோரும் எண்ணியிருப்பார்களானல் பரஸ்பரம் ஒற்றுமையடைந்துவிடலாம். வெவ்வேறுபட்ட பலவழிகளை இதுதான் நல்லது இதுதான் நல்லது என்று ஒவ்வொருவரும் நினைப்பார்களானல் எவர் வழியை நாடி எவர் செல்லுகிறதென்று சொல்லமுடியும். அவரவரும் தம்தம் வழியே சிறந்ததென்பர். அப்படிதிடநிச்சயமுள்ளவரை கலக்க முடியாதுபற்றி அவரவர் வழியிலேயே அவரவர் நிற்கவேண்டிய நியாயமேயொழிய மற்றவர்களை மாற்றமுயல்வது வீணனகாரியம். ஆகவே வர்ணுசிரமிகளைக் கலைத்து வர்ணுசிரமதர்மத்தை விடும்படி போதிப்பது ஸாஹஸகாரியமாகும். அதிலும் தர்மத்துவேஷிகளும், தர்மாநதிகாரிகளும் தர்மத்தை உபதேசிக்க முன் வருவது காலதோஷமேயன்றி வேறில்லை. ஸநாதனதர்மிகளுடைய உபனயன விவாஹாதிகளான ஸ்திரீபுருஷதர்மங்களை கிரிஸ்தவர்களும், முகம்மதியர்களும், மற்றஸங்கரஜாதிகளும் சேர்ந்து கூட்டமாக ஓட்டுசெய்து தீர்மானிக்க தர்மதேவதையே அங்கீகரிக்குமா? ஸநாதனதர்மாசாரியாளும், தர்மப்பிரசார விஷயத்தில் அவர்களின் ஆக்ஞையைப்பெற்ற பண்டிதர்களும் சொல்லுவதெல்லாம் சரியாயிருக்கமாட்டாதாம். விதேசியர்கள் விஜாதீயர்கள் சொல்லுவதை தர்மமென்று ஸநாதனதர்மிகள் ஒப்புக்கொண்டு நடத்தவேண்டுமாம். இதென்ன விபரீத காலங்கள் பாருங்கள். ஸ்நாதனதர்மிகளின் குலத்திற்பிறந்த சிலர் மற்றவர் சொற்படி கேட்பதேநலமென்று துணிந்துவிட்டார்கள். வேறுசிலர் தேசிய விஷயமாகப் பாடு படுவதாகப் பிரவித்தியையடைந்து பாரமார்த்திகப் பதவிகளையே பாழாக்கிவிடப்பார்க்கிறூர்கள். இந்த விபரீதவாதங்களுக்கெல்லாம் இடங்கொடுக்காமல் நம் பாரதமக்களும், அதிலும் ஸநாதனதர்மிகளும், தர்மாசாரியாள் காட்டிய வழியே நடந்து தங்களுக்கும் தங்களுடைய சிறுவர் சிறுமிகளுக்கும் க்ஷேமத்தையே தேடிக்கொள்வார்களென்று 16-வது ஆண்டு ஆரம்பத்தில் எமது ஆர்யதர்மம் ஆர்யர்களை வேண்டிக் கொள்ளுகிறது.

சுபம்.

பத்திராதிபர்.

# ஆர்யதர்ம விஜயம்.

தை மாதம் நல்லபாதமாய்ப்பிறக்க, எமது ஆர்யதர்மத்திற்கு 15-வது வயது நிறைந்து 16-வது ஆண்டு ஆரம்பமாயிற்று. 15 வருஷகாலமாக ஸ்ரீ சந்திரமௌளீச்வர கருணையாலும், ஸ்ரீ. காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ மதாசாரியபாதாளுடைய பரிபூர்ணபிரஸாதத்தாலும், நமது ஆர்யதர்மம் தனதுபால்யப்பருவத்திலும் இதரஸஹாயமில்லாமலே ஸநாதனதர்மிகளின் வர்ணாசிரம தர்ம தத்துவங்களை ஸமயோசிதம்போல் போதித்து தமிழ்நாட்டில் விஜயம் செய்துவந்ததை யாவருமறிவார். 16-வயதுவரை பால்யப்பருவமென்றும், பிறகு யௌவனமென்றும் வைத்திய நூல்களில் பிரித்துள்ளபடி இவ்வாண்டிலும் பால்யத்திலிருந்தாலும் இது வித்தியாப்பியாஸ பூர்த்தி காலமானதுபற்றி வித்தையின் பூர்த்தி இலக்கணமான ஆத்மகுணங்களையே பெரும்பாலும் பிரசாரம் செய்ய உத்தேசிக்கின்றது. ஆத்ம குணங்களின் பெருமை அதை நிரூபிக்கும்பொழுது நன்கு விளங்கும். சென்ற சில ஆண்டுகளில் கர்ப்பாதனம் முதலிய சரீர ஸம்ஸ்காரங்களைப்பற்றியும், ஆன்ஹிக கார்யங்களைப்பற்றியும் போதித்து வந்தது. அதற்கெல்லாம் பயனாகவுள்ளது ஆத்மகுணங்களே. ஆத்மகுணங்கள் இல்லாவிடில் சரீரஸம்ஸ்காரமெவ்வளவு ஏறியிருந்தபோதிலும் சோபிக்காதாம். ஆகவே எந்த மனிதனும் ஆத்ம குணங்களை பலாத்காரமாயாவது அப்பியாஸம் செய்துகொள்ளவேண்டியது அத்யாவசியமாகும். ஆத்மகுணங்களென்றால் எவை? அவை எவ்வளவு. எத்தன்மைத்துள்ளவை என்பதாதி விஷயங்களே ஆத்மகுண நிரூபணத்தில் சொல்லவேண்டியவை, ஒவ்வொரு மனிதனுக்கும் பால்யப்பருவம் பூர்த்தியாவதற்குள்ளும், யௌவனப்பருவம் ஆரம்பமாவதற்கு முன்னமேயே ஆத்மகுணங்கள்

யாவும் நிறைந்திருக்கவேண்டியது. யௌவனப்பருவம் ஆரம்பமாய்விடும்பொழுது விஷயாசாப்பிரவாஹம் பெருகிக் கரைபுரண்டு வரும்பொழுது ஆத்மகுணங்கள் பரிபூர்ணமாயிருந்தால் பெரிய அணைக்கட்டுபோல் அந்தப் பிரவாஹம் மீறி ஒன்றையும் அழித்துவிடாமல் தடுத்துக்கொண்டிருக்கும். அன்றியும் காமக்குரோதங்களின் வேகம் யௌவனப்பருவத்தில் அடங்காததாய்க் கிளம்பும். அதையடக்க யானைக்கு அங்குசம்போல் மனமென்றும் மதயானைக்கு ஆத்மகுணங்களாகும். யௌவனப்பருவம் ஆரம்பிக்கு முன்னே ஆத்மகுணங்களை ஒருவன் அடைந்து விட்டானாகில் அவனுக்கு காமக்குரோதாதிகளாலேற்படும் அனர்த்தம்யாதொன்றும்வரமாட்டாது. சகல சுகங்களும் கிடைக்குமென்று கீதையில் பகவான் போதிக்கிறபடி ஆத்மகுணங்களை போதித்துக்கொண்டு விஜயமாய்வரும் ஆர்யதர்மத்தை யாவரும் நல்வரவேற்றி அன்புடன் ஆதரித்து ஆத்மகுணங்களை அடைந்து இஹபரசிரேயஸ்ஸையடைந்து யாவரும் சுகப்படுவார்களாக.

சுபம்

பத்திராதிபர்.

---

## அகிலபாரத வர்ணாசிரமதர்ம ஸ்வராஜ்ய சங்கத்தின் முதல் வருஷத்திய ஸபையின் அக்கிராசனரின் சொற்பொழிவு.

---

மஹாமஹிமை தங்கிய வர்ணாசிரம தர்மாபிமானிகளான ஸபையோர்களே! நீங்களெல்லோரும் தைவ வசத்தால் க்ஷேமவிருத்தியையடைந்தவர்களாகிறீர்கள். ஏனெனில்—கருணைக் கடலாகிய பரமேசுவரனுடைய கருணாகடாக்ஷம் நம் பாரதபூமியின்மீது நீண்டகாலமாகவே விழுகிறதல்லவா! பகல்—இரவு போலும், குளிர்காலம்-கோடைகாலம் போலும் காலபேதத்திற்குத்தக்கவாறு சுபாசுபங்களோ-சுகதுக்கங்களோ கிரமமாக வந்துகொண்டிருக்கையில் தேச பேதத்திற்குத் தக்கபடி குளிரும்—உஷ்ணமும் ஏற்றக்குறைவாயிருப்பதுபோல் சுபாசுபங்களும்—சுகதுக்கங்களும் தேசத்திற்குத் தக்கவாறு ஏற்றக்குறைவாகக் கிரமப்படி வந்துகொண்டிருப்பினும், நம்பாரதபூமிக்கு சுபத்திலேயே முழுநோக்கமிருப்பது இயற்கையாய் பகவானாலேயே

செய்யப்பட்டதென்பது சரித்திர ஆராய்ச்சியிலிருந்து நிர்ணய மாகிறது. அத்தகைய சுபம்பெறுவதற்கு தர்மமே மூலகாரணம் அசுபமுண்டாவதற்கு அதர்மம் காரணமாம். தர்மாதர்மங்களுக்கு சுருதிஸ்மிருதிகள்தான் பரமபிரமாணம். முன்னொரு காலத்தில் வேனனென்னுமரசன் தர்மத்தைக் கெடுப்பதற்காகபெருமுயற்சி செய்து ஜாதி ஸாங்கர்யத்தையுண்டுபண்ணினான். பிரஜைகளுக்கு இயற்கையாயமைந்துள்ள தர்மாசரணத்தையும் தன்டோராப்போட்டுத் தடுத்தான். இவ்விதமாக தேசநன்மைக்குக் கெடுதலான அசுபகாரியம் பரவத்தலைப்படவே அதை ஸஹிக்காமல் தர்மஸேதுவான பகவானே அந்த வேனனுடைய தேஹத்திலிருந்து ஆதிராஜனான பிருது சக்ரவர்த்தி ரூபமாயவதரித்து அதர்ம சங்கடத்தால் வாடிநிற்கும் தர்மத்தை நிலை நாட்டினாரென்பது மாத்திரமல்ல. பலவித உபாயங்களால் தர்மம் அதிகமாகச் செழிக்கும்படிசெய்தார், ஆகவே வேனன் செய்வித்த அக்காலத்திய அதர்மப்பிரவிருத்தியும் பரம்பரையாய் ஆதிராஜனான பிருது சக்கிரவர்த்தியின் அவதாரத்திற்குக் காரணமாகி நம் பாரதபூமியின் சுபநோக்கத்தையே ஸூசிப்பித்ததென்னுமிந்தப் பழைய சரித்திரம் புராணங்களில் பிரஸித்தமாயுள்ளது. பிறகு பௌத்தர்களின் சூழ்ச்சி கிளம்பி வர்ணாசிரம தர்மத்தை முதலில் வாடும்படிசெய்தபோதிலும் முடிவில் வர்ணாசிரமதர்மம் அபிவிருத்தி அடைவதற்குக் காரணமாயிற்று. எப்படியெனில்—பௌத்தர்களின் சூழ்ச்சியால் நேர்ந்த ஆபத்தைவிலக்க பகவதம்சபூதாளாய் அவதரித்த வாத்ஸ்யாயனமகரிஷி, சபரஸ்வாமி, குமாரில பட்டர் முதலிய மஹாத்துமாக்களான ஆசார்ய புருஷர்களுடையவும், விசேஷமாய் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கரபகவத்பாதாசாரியஸ்வாமிகளவர்களுடையவும் தர்ம தத்துவத்தைப் பிரகாசப்படுத்துவதற்காக பிரயோகிக்கப்பட்டப்பிரபாவம், பௌத்தமதத்தைவிரட்டினதோடுமாத்திரமாய் நிற்காமல் வர்ணாசிரமதர்மத்தையும் திடமாய் நிலைக்கும்படிசெய்தது. அக்காலத்தில் அம்மாதிரியான பௌத்தர்களின் சூழ்ச்சி நேர்ந்திருக்காவிடில் கீழ்க்காட்டிய மஹாத்துமாக்களின் பிரவிருத்திதர்ம-நிவிர்த்திதர்ம வியாக்கியான வடிவமான அமுதமொழிகளால் அக்காலத்தில் ஓங்கிவளர்ந்த உலகத்தாரின் அக்ஞான இருள் விலகியிருக்கமாட்டாது. அதர்ம மூலமான அசுபமே முடிவில் நம் பாரதமக்களுக்கு சுபாபிமுக

மாக ஆய்விடுகின்றதென்பதற்கு கீழ்க்காட்டிய இரண்டு உதாரணங்களே போதுமானவை. அத்தகைய நல் காலக்குறியுமிப்பொழுது காணப்படுகிறது. மஹானுபாவர்களான அனேகர்கள் விதேசியர்களது சிக்ஷைக்குக் கீழ்ப்படிய நேர்ந்திருப்பதே வர்ணாசிரம தர்மத்திற்குப் பெரிய வாட்டமல்லவா? அதனால் வர்ணாசிரம தர்ம ஸ்வாராஜ்யத்தை யிழந்த தௌர்பாக்கியத்தை விலக்கிக்கொள்ள தர்மசாஸ்திரகாரர்களான மஹரிஷிகளின் ஸம்மதமான அஹிம்ஸையாகவே ஒத்துழையாமையும் அதற்குரிய உபாயங்களை அவலம்பிக்கும் முறைகளும் பெரும்பாலும் உபேக்ஷிக்கப்பட்டன. அதனால் வார்ஸுபாத்தியமாய் அவசியம் நமக்கே கிடைக்க வேண்டிய வர்ணாசிரம தர்மஸ்வராஜ்யம் நம்முன் சிலராலேயே கெடுக்கப்படுகின்றது, ஸமஸ்த பூமண்டலத்தில் நமது பாரத வருஷமே சிரேஷ்டமான ஸ்தானம். ஏனெனில்—இதுவே கர்ம பூமியாம். அதிலும் எங்கு வர்ணாசிரமதர்ம வியவஸ்தையுளதோ, அது மஹாபுண்ணியபூமியாம். மிலேச்சர்களோடு சேர்க்கையும், மிலேச்ச பூமிக்குச்செல்லுதலும், மிலேச்ச பாஷையைக் கற்பதும் பிராமணர்களுக்கு தோஷத்தையுண்டுபண்ணுமென்றல்லவா நமது தர்ம சாஸ்திர ஸித்தாந்தம், அந்த ஸித்தாந்தம் மட்டிலுமுபேக்ஷிக்கப்படாமலிருக்குமாயின் விதேசியர்களின் ராஜ்யாதிகாரமிருந்தபோதிலும், பாரதமக்களுக்கு அத்தகைய ஸ்வாராஜ்யம் கைவிட்டு நழுவிப்போயிருக்காது. சாஸ்திரத்தில் நல்ல சிரத்தையும்தர்மத்தின்பிரேமையுமிருக்குமாயின் எவன்றான் மிலேச்சர்களோடு கலந்துவாழ உற்சாஹப்படுவான். பாருங்கள், விதேசியர்களுடைய எந்த ஸாமானும் தர்மசாஸ்திர வசனப்படி விலக்கவேண்டியதாகவே விதிக்கப்படுகிறது, மாட்டெலும்பு சேர்ந்ததால் சர்க்கரையும், சாராயம் சேர்ந்ததால் ஸகல ஔஷதங்களும், தலப்புவைத்து நெசவுபோடாததால் விதேசிய ஆடைகளும், மிலேச்சர்களுண்டாக்கியதால் பிஸ்கேட் முதலிய தின்பண்டங்களும், எச்சில்பட்ட மண்பாத்திரம் தள்ளத்தக்கதென்ற தர்ம சாஸ்திர வசனத்தால் பீங்கான் முதலியவைகளும், இயற்கையாகவே மதத்தையுண்டுபண்ணக்கூடியதாகையால் சாராயம் முதலியனவும் மற்றுமிவைபோன்றவைகளெல்லாம் தோஷத்தையுண்டுபண்ணக்கூடியவையென்று தள்ளவேண்டியதாகவேயாகின்றன. இப்படி தள்ளத்தக்கவைகளென சாஸ்திர வசனத்தா

லேயே விவரிக்கப்படுகின்ற விதேசிய வஸ்துக்களை விலைக்குவாங்கி சாஸ்திர சிரத்தையுள்ள எவன்தான் தனக்கு நாகத்துவாரத்தைத் திறந்து வைத்துக்கொள்வான்.

இதைச்சற்று நமது ஸநாதனதர்மிகள் ஆலோசித்துப்பார்ப்பார்களானல் விதேசிய சாமான்களின் விற்பனைக்கே எள்ளும் தண்ணீரும் இறைக்கவேண்டியதாய்விடும். வியவஹாரஸ்தானங்களும் சாஸ்திரத்திற்கு விரோதமாகவே நிர்ணயப்படுத்துமிடமாயிருப்பதை நினைத்து பரிஹரிக்கப்பட்டால் விவாதம் நேர்ந்த விஷயங்களில் அவைகளை ஸமரசப்படுத்த நமது புராதன மதத்தையே அனுஸரித்து பஞ்சாயித்து ஸ்தானங்களும் லோபித்திருக்கமாட்டா. இப்படியானல் விதேசிய ராஜாங்கத்தாருக்கு வேறு விதேசிய சத்துருக்களின் ஆக்கிரமணத்தைத் தடுப்பதும், திருடன் குற்றவாளி முதலியவைகளை அடக்குவதும், அதற்காக ஏதோ சில வாயிதாவரி வஸூல் செய்வதுமே கார்யமாகும், ஆகவே விதேசியர்கள் இம்மட்டோடே சந்தோஷப்பட்டு விடவாவது, ஸகலமும் ஸம்பூர்ணமாயிருப்பதாக பாவித்துக்கொண்டு விடவாவது முடியாது. அப்பொழுது அஸ்திரசஸ்திரங்களாலேற்படும் போர் யாதொன்றுமில்லாமலே நமது பாரதநாடு ஸ்வாதீனமாகவே ஆய்விடும். ஆனல் விதேசியர்களின் கல்வியைக்கற்கும் பிரபாவத்தினலோ, பணத்தாசையாலோ, வேறுகாரணத்தாலோ நம் ஸநாதன தர்மிகள் மாத்திரம் சாஸ்திரமரியாதையை மீறி நடக்காமலிருக்கவேண்டும். எப்பொழுது நம் பாரத மக்களுக்கு வர்ணாசிரம தர்மத்திலேயே ஸம்பூர்ண தாத்பர்யமேற்பட்டு, விதேசிய ஸாமானேற்றிவந்த கப்பல் ஸாமான்கள் விற்று முதலாகாமல் வந்த வழியே சொந்த இடம் சேரும்படிநேர்ந்துவிட்டதோ, அப்பொழுதே நீதிவல்லர்களான விதேசியராஜபுருஷர்கள் வர்ணாசிரம தர்மத்தைக்கெடுக்கத் தலைப்பட்டார்கள். வர்ணாசிரமதர்மத்தைக் கெடுப்பதற்கு முக்கியக் கருவியாக ஆங்கில வித்யாப்யாஸத்தையே குறிப்பிட்டார்கள். பிறகு காலக்கிரமமாய் அந்தப்படியே நாடெங்கும்பரவ, அதன் பயனக சிற்சில பேருக்கு சம்பாத்யம் ஜாஸ்தியாகி பணமும் பெருக, அதைப்பார்த்துக்கொண்டு ஸர்வ ஜனங்களும் அவ்வழியிலேயே ஈடுபட்டுவிடவே, கோட்டை வாசற்காரன் எதிராளியிடம் கைக்கூலி வாங்கி ரஹஸ்யமான வழியை திறந்துகாட்டி அதன் வழியாக சத்துருஸைந்யங்களை உள்ளே

விட்டு ஆக்கிரமிக்கச் செய்வதுபோல், ஆங்கிலபாஷாப் பயிற்சியே வர்ணாச்ரம தர்மவிரோதிகளிடம் கைக்கூலி வாங்கியதுபோல் லோபம், மோஹம் இந்த வழியாக விபரீதமான அதர்மங்களை வர்ணாசிரம தர்மிகளின் ஹிருதயத்தில் பிரவேசிக்கச்செய்து ஆக்கிரமிக்கும்படியும் செய்துவிட்டது. கிரமமாக, ஸநாதனதர்மிகளின் ஹிருதயமெனப்படும் பந்தோபஸ்தான இடத்தில் வைக்கப்பட்டிருந்த சாஸ்திரசிரத்தையென்னும் இரும்புப்பெட்டியைப் பிளந்துவிட்டது. அதிலிருந்து தர்மங்களென்னும் இரத்தினங்கள் சிதறிப்போய்விட்டன. அதன் பரிணாமமாக நம் பாரதபூமிக்கு நேர்ந்த விபரீத அவஸ்தை மிகவும் சோகப்படத்தக்கதாக ஆய்விட்டதென்பது பிரத்தியக்ஷமாக அனுபவிக்கப்படுகின்றது. அதனால் எவ்வளவு அசுபம் நம்பாரதபூமிக்கு நேர்ந்துவிட்டதென்பது பகலில் சூரியவெளிச்சம்போல் மிகவும் பிரகாசமாயுள்ளதே யானதால் அதைப்பற்றி அதிக ஆடம்பரமாய் வர்ணிக்கவேண்டியதில்லை. (இவ்வளவு கூறியதே போதுமானது. அசுபம் நேரும்போதெல்லாம் சுபாபிமுகமாகவே முடிகிறதென கீழ்காட்டியது போலவே இப்பொழுது நேர்ந்த அசுபமும் சுபாபிமுகவேயாகும் நிலைமையைக்கூறுவாம். ஆங்கில பாஷாப்பியாஸமானது இவ்வளவுநாளாகத்தன்னால் ஆக்கிரமிக்கப்பட்டவர்களுக்கெல்லாம் சாஸ்திரசிரத்தையை அடியோடுதொலைத்து, வர்ணாசிரமிகளின்ஸமாஜத்திலேயேவெறுப்பையுண்டுபண்ணி விட்டபோதிலும் நம் ஜன்மபூமி பாரதீனப்பட்டதிலிருந்து, பிறரைப்பின்பற்றவேண்டியதானதின்மூலமாகநேர்ந்த கஷ்டானுபவத்தைக்காட்டிவிட்டது. அந்தக் கஷ்டத்தைப் பரிஹரித்துக்கொள்ளுவதற்காக விதேசிய பத்ததியையே அனுஸரிக்கும் சில பிராசீன புருஷர்கள் தங்கள் வாக்குவீர்யத்தினாலேயே விதேசிய பக்ஷத்தைப் பரிஹஸிக்க முயன்றார்கள். வேறுசில நவீனர்களும் விதேசியர்களை அனுஸரித்தே அதற்காக முயன்றார்கள். "இவையெல்லாம் நம்முடைய இஷ்டஸித்திக்கு உபாயமேயல்ல. ஏனெனில் ஆஸ்தியும் ஆயுதமுமில்லாதவர்கள் ஆயுதவானும் பணத்தெம்புமுள்ள அன்னியர்களை ஹிம்ஸித்துத் தாழ்த்திவிடுவார்களென்பது தெப்பத்தால் திரைகடலைத் தாண்டுவதுபோல் சம்பவிக்காதகார்யம்" என்று தீர்க்காலோசனைசெய்யத் திறமைவாய்ந்த புத்திமானாகிய ஒருவன் மனதில் பகவானே தோன்றவைத்தார். அவனொருவன்தான் ஆங்

கில அப்பியாசத்தாலுண்டான ஜன்மபூமிப் பிரீதியையடைந்தவர்களுள் முதன்மைபெற்றவன். அவனொருவனுக்குத்தான் அஹிம்ஸையாகவே ஒத்துழையாமையைப் பகவான் காண்பித்தார். ஆனாலிதுவும் துவேஷமூலமாக நிகழ்ந்ததுபற்றி உண்மையான அஹிம்ஸையாய் விடமாட்டாது. ஆயினும் மனிதரின் வகையில்லாமையால் அஹிம்ஸையென்று உபசரிக்கப்படுகின்றது

ஆனால் உண்மையான அஹிம்ஸையாதெனில் தர்மத்தில் தானாகவே பிரீதியுண்டாகி அதன் மூலமாக ஏற்பட்ட சாஸ்திரீயமான ஒத்துழையாமையே 'வாஸ்தவமான அஹிம்ஸையாகும். அதை நம்மவர் விட்டதினாற்றான் நம் கையிலிருந்த வர்ணாசிரமதர்ம ஸ்வாராஜ்யத்திற்கு நழுவுதலேற்பட்டது. இந்தப் பழக்கமில்லாமலும் சாஸ்திர இரஹஸ்யம் தெரியாமலிருப்பவர்கள் இதோர் புதிதான பெரிய உபாயமென்று புதிது புதிதாக எதையெதையோ சொல்லி வருகிறார்கள். அவையெல்லாம் எப்படி வேண்டுமோ அப்படி ஆகுக, பிரகிருதத்தில் திசைகாட்டி இயந்திரத்தின் மானக்கோல் துருவத்தை நோக்கியே நிற்பதுபோல் நம் பாரதபூமியின் ஸ்திதியும் துருவத்தி (சாசுவதசுபத்தி) லேயே நோக்கமுடையது. அசுபம்சாசுவதமன்று. சுபந்தான்சாசுவதமாயுள்ளது. எந்தவிதேசீய அப்பியாஸமானது சாஸ்திரசிரத்தையை அடியோடழித்து அதன் மூலமாக வாஸ்தவமான சாஸ்திரீய அஹிம்ஸையை விலக்கிவிட்டு மிகவும் அசுபத்தை விளைவித்ததோ; அதே அப்பியாஸம் நல்ல க்ஷேத்திரத்தில் விழுந்து சாஸ்திரீய அஹிம்ஸையையே முளைக்கச்செய்து சுபாபிமுகமாய் முடிந்தது. அதனாற்றான் ஸந்தோஷமாய்த் தங்களிடம்– "நீங்களெல்லோரும் தைவவசத்தால் க்ஷேமவிருத்தியை அடைந்தீர்கள்" என்று தெரிவிக்கிறோம். அத்தகைய அஹிம்ஸை சாஸ்திரசிரத்தாமூலமாய் திடமாயேற்பட்டு வர்ணாசிரம தர்மத்தையாசிரயித்து அதில் யாவருக்கும் உண்மையில் பூர்ணப்பிரீதி உண்டாகவேண்டும். நம் ஸநாதன தர்மிகளுக்குப் பரஸ்பரம் துரோகசிந்தையே உண்டாகக்கூடாது. பரஸ்பர பிரீதி பெருகவேண்டும். அப்படியானால் விதேசீயர்களின் முயற்சி ஜகத்தின் ஸகலசுபத்திற்கும் காரணமாகிய நம் சாஸ்திரத்தைத் தொலைக்கக் காரணமாகாதென்பது மாத்திரமல்ல, அதை ரக்ஷிக்கவும் ஹேதுவாகவுமாய் விடும். அதற்காகத்தான் நம்முடைய அகில பாரதீயவர்ணாசிரமதர்ம ஸ்வாராஜ்ய சங்கத்தின் ஆரம்பம்.

அதில் செய்யவேண்டியதைக் கூறுவாம். சாஸ்திரீய வழியாய் வர்ணாசிரமதர்ம ஸ்வாராஜ்யத்தையடைய வேண்டும். அதற்கு உபாயம் யாதெனில் தர்மத்வேஷிகளோடு ஒத்துழைப்பதும், அல்லது அவர்களோடுவிரோதப்படுவதும்,அல்லது ஏழ்மையைக்காட்டி பிச்சை கேழ்பதும், அல்லது பலாத்காரமாகப் பிடுங்கக்கடுமை காட்டுவதும் உபாயமே அல்ல. இவ்வழிகளில் அவர்களோடு கலந்து கொள்ளவேண்டியதாகவே நேர்ந்துவிடுகிறது. ஆனல் இதற்கு முன் எவர்கள் அந்த தர்மத்துவேஷிகளோடு அதிகமான பழக்கத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்களோ, அவர்களை இயன்றவரை அதைவிடும்படி செய்யவேண்டும். சக்தியிருந்தால்அடியோடு அப்பழக்கத்தையே விடச்செய்யவேண்டும். அவர்களோடு பழக்கம் நேரிடாமலிருப்பவர்களை அப்பழக்கமென்னும் விஷம் தீண்டாமல் தூரத்திலேயே வைத்து இரக்ஷிக்கவேண்டும். விதேசத்திற்குப் போகும் ஆசையைப் ஒழிக்கவேண்டும். தர்மத்வேஷிகள் தயையைப்பெற ஆசைகொள்ளக்கூடாது. அவர்களையனுசரித்துக் நடக்கக்கூடாது. நமக்கென்று ஓர் அவலம்பத்தைப் பிடிக்கவேண்டும். பார்ப்பனர்களுக்கும் பார்ப்பனால்லாதார்களுக்கும் பரஸ்பரம் விரோதமுண்டாவது நலமென்று பிறர் நினைப்பது நம் பாரதமக்களுக்குச் கெடுதலென்று நமது சாஸ்திரங்களில் திருஷ்டிவைக்கவேண்டும். சாஸ்திரீயமான இரஹஸ்யவித்தைகளை அப்யஸிக்கவேண்டும். லோபித்துப்போன வித்தைகளைப் புனருத்தாரணம் செய்யவேண்டும். புருஷதோஷங்களைத் தள்ளிவிட வேண்டியது. அதிகாரத்துக்குத் தக்கவாறு ஆத்மஞானத்தை அடைய முயலவேண்டும். அதனல் ஸத்துவகுணம் விருத்தியடையும். ஸத்வகுணம் மேலிடாமல் பாரத வாஸிகளுக்கு க்ஷேமமுண்டாகாது. விதேசிய மோஹம் வந்து மூடிக்கொண்டிருக்கும் ஸமயத்தில் ஸமாஜ ஸம்ஸ்கார வியாஜத்தால் பிராசீனசாரத்தைக் கெடுத்துவிடக் கூடாது. தர்மத்வேஷிகளின் முயற்சியால்நேர்ந்த ஆபத்தும் விலகி, ஸத்வகுணமும் மேலிட்டு வரும்போது சாஸ்திரசிரத்தையால் புனிதமானமனதோடு ஒரு ஸமாஜத்தின்நன்மைக்கு முயலவேண்டுமேயன்றிதர்மத்வேஷிகளின் பழக்கப்பிசாசுபுகுந்து கொண்டிருக்கையில் முயலக் கூடாது. பிசாசு பிடித்தவர்களால் பிசாசை விரட்ட முயலமுடியுமா. ஒருக்காலும் முடியாது. ஆகவே அந்தப்பிசாசு பிடிக்காதவரைச்சரணமடையவேண்டுமென்று

சுருக்கமான எனது அறிவிப்பு. இவ்வாறு முதல் அறிவிப்பு முடிந்தது. கடைசியாய் நான் கேட்டுக்கொள்வதொன்று.

அதாவது— சிறுவர்களோ, யுவர்களோ, கிழவர்களோ, யாரேனும் சரி சரீராபேக்ஷையையும் விட்டு நமது பிராசீனமான வர்ணாசிரம தர்ம ஸ்வாராஜ்யத்திற்காகப் பாடுபடுகின்றனரோ, அவர்களையெல்லாம் பார்த்துக் கிழவனாகிய நான் அன்போடுவேண்டிக்கொள்வது இதுவே. எதென்றால்— நீங்களெல்லோரும் ஸ்ரீ பகவானுடைய வசனத்தைக் கேளுங்கள். கேட்டு அதன்படி நடத்துங்கள். அதனால் நமக்கெல்லாம் யாதொரு இடையூறுமின்றி சிரேயஸ்ஸை கிடைக்கும். அந்த வசனம் யாதெனில்—

य: शास्त्रविधिमुत्सृज्य वर्तते कामकारत: ।
न स सिद्धिमवाप्नोति न सुखं न परां गतिम् ॥
तस्माच्छास्त्रं प्रमाणं ते कार्याकार्यव्यवस्थितौ ।
ज्ञात्वा शास्त्रविधानोक्तं कर्म कर्तुमिहार्हसि ॥

"எவனொருவன் சாஸ்திரவிதியைவிட்டு இஷ்டப்படி நடக்கிறானோ, அவன் ஒரு கார்யசித்தியையுமடையமாட்டான். இஹலோக சுகத்தையும் பெறமாட்டான் பரலோகத்தையுமடையமாட்டான். ஆகையால் உனக்கு இதுகாரியம், இது அகார்யம், என்று வியவஸ்தை செய்துகொள்வதற்கு சாஸ்திரந்தான் பிரமாணம், ஆகையால் சாஸ்திரவிதியிற்கூறியபடி நீ கர்மாவைச்செய்ய அர்ஹனாகிறாய்" என்பதுதான் அந்த ஸ்ரீபகவானுடைய வசனம். அதன்படி யாவரும் நடந்து நன்மை அடைவார்களாக.

தர்க்கரத்ன பஞ்சானனபட்டாசாரியார்.

---

## அகிலஇந்தியா வர்ணாசிரமதர்மஸ்வாராஜ்ய சங்கத்தின் இரண்டாவது மூன்றாவதுநாள் நடவடிக்கை.

முதல்நாள்இரவு விஷயாலோசனைக் கமிட்டியில் குறிக்கப்பட்ட விஷயங்களை ஒவ்வொன்றாக ஒருவர்பிரஸ்தாவம்செய்யவும், ஒருவர் ஆமோதிக்கவும், ஒருவர் வியவஸ்தைசெய்யவும் ஸபையோர்களால் ஏகமனதாய் அங்கீகரிக்கப்பட்டுவருகையில், காலை 9-மணிசுமாருக்கு சுமார் 30-ஆஹிதாக்னிதிராவிடர்களைச் சேர்த்துக்கொண்டு அவர்களுக்குத்தலைவரான ஒருவர், மஹா மஹோபாத்தி

யாய பிரம்ம ஸ்ரீ அனந்தகிருஷ்ண சாஸ்திரிகளவர்களிடம் "இவர்கள் சங்கத்தில்கலந்துகொள்ள விரும்புகிறார்களே" ன்றுதெரிவிக்க அதற்கு சாஸ்திரிகள் அவர்களும்— "இந்தசங்கம் ஏகதேசத்தில் என்னுடையதல்ல. அதனால் நான் ஒன்றும் சொல்ல இடமில்லை. ஆனால் இந்த அபிப்பிராயத்தை ஸபையோர்களின்முன்பாகத்தெரிவித்து அவர்கள் சொல்லுவதை இன்னு மொருமணிக்குள் வந்து சொல்லுகிறேன். அதுவரையில் அவர்கள் வழியிலில்லாமல் விலகி இருக்கட்டும்" என்று சொன்னார்கள். அப்படியானால் நாங்கள் ஸத்தியாக்கிரஹத்திற்கு ஆரம்பிப்போம்—என்று அவர்கள் சொல்லவே—அதற்கு சாஸ்திரிகளவர்கள்—"ஸபையோரிடம் தெவித்துப் பதில்வரும்வரை பொருத்துக்கொள்ளாமல் உடனே ஸத்தியாக்கிரஹப்பிரயோகம்செய்வது ஸத்தியாக்கிரஹமாகாது. பிடிவாதமாகும். அது உசிதமில்லை, இதை கேழ்க்காமல் ஸத்தியாக்கிரஹம் செய்வீர்களானால் அந்த ஸத்தியாக்கிரஹவழி எங்களுக்கும் தெரிந்ததுதான். நீங்களிங்கு ஸத்தியாக்ரஹம் செய்யுங்கள். நாங்களும் அங்கு ஸத்தியாக்கிரஹம் செய்கிறோம். ஆனதுஆகட்டும்" என்று சொல்லிவிட்டு இவ்வளவுஸமாசாரத்தையும் தர்மாசாரியர்களும், பிரஸிடெண்டவர்களும்ஸபையோர்களும் கூடியசங்கத்தில் அறிவித்து அவர்களுக்கு நான் சொல்லிவந்தபதில் சரியென்று ஸபையோர்கள் அபிப்பிராயப்பட்டால் சரி, அல்லது அபிப்பிராய பேதமிருக்குமானால் அதை ஸபையின் சார்பாக ஒருவர்மூலம் அவர்களுக்குத் தெரியப்படுத்தவேணும்—என்று தெரிவித்தார்கள். ஸபையோர்களும் அதே சரியென்று அங்கீகரித்துவிட்டார்கள். அவர்களும் ஸத்தியாக்கிரஹத்திற்கு ஆரம்பித்து, கேட்டுக்கு வெளிப்புறமுட்கார்ந்துகொண்டு பஜனை செய்துகொண்டிருந்தார்கள். ஸபைக்கு வரும் ஜனங்களின் போக்குவரத்துக்கு அது இடையூறாயிருந்தமையால், அந்த கேட்டைப்பூட்டிவிட்டு வேறு வழி ஏற்பாடு செய்தார்கள், ஸாயங்காலத்தில் ஸத்தியாக்கிரஹிகள் கேட்டுப் பூட்டை யுடைத்து பலாத்காரம் செய்வதாக உத்தேசத்துடன் நடத்தியதை யறிந்து போலீஸாருக்குத் தெரிவிக்க போலீஸாரும் அச்செய்கைக்கு ஆதாரமாயிருந்தவர்களை அரஸ்டுசெய்து ஸ்டேஷனுக்கு அழைத்துப்போய் உருதிமொழி வாங்கிக்கொண்டு விட்டுவிட்டார்கள். இவ்வளவுதான் அங்கு நடத்தநடப்பு. இதைச் சில பத்திரிகைகளில் எல்லா அம்சங்களையும் அதிகப்படுத்தியும், ஸநாதனதர்மிகள் சரிவர நடக்கவில்லை யென்ற தோஷத்தை யேற்

படுத்தியும், மறுதினத்திலேயே பிரசுரம் செய்துவிட்டார்கள். ஸநாதனதர்மிகளுக்கென்று ஒரு தினசரிப்பத்திரிகை யில்லாமையால் இந்த உண்மையை அப்பொழுதே வெளியிட முடியவில்லை. ஆர்யதர்மமுமிப்பொழுதுதான் இடங்கொடுத்தது. உண்மை வெளிப்படுவதற்காக மாத்திரம் நாளானாலும் பிரசுரிக்கப்பட்டது. ஸாயங்காலத்தில் அனேகவிஷயங்கள் ஸநாதனதர்மவிரோதமில்லாமல் விசாரித்து முடிவு செய்யப்பட்டன. பிறகு இவ்வாறு வருஷத்திற்கொருதடவை 2-3-நாள்கூடி பேசிவிட்டதால் மாத்திரம் போதாது தற்காலம்ஸபையில் கூடியிருப்பவர்களும்—"ஸநாதனதர்மக்கி—ஜே" என்று வாக்கினல் மாத்திரம் சொல்லிவிட்டதும் போதாது. இந்தத் தீர்மானப்படி ஸநாதனதர்மங்களையே அனுஷ்டித்து வருவதென்று திடமான உருதியை ஒவ்வொரு ஸநாதன தர்மியும் மனதில் கொள்ளவேண்டும். இதுவும் போதாது. பிரதிநகரத்திலும், பிரதிக்கிராமத்திலும் பண்டிதர்களைச் செலவுக்கும் கொடுத்து அனுப்பி ஒவ்வொருவனுக்கும் மனதில் படும்படி உபந்நியாஸம் செய்யச்சொல்லவேண்டும். அதற்கு ஆஸ்திகர்களான கனதனவான்கள் அவரவர்களாலியன்றவரை தனஸஹாயம் செய்யவேண்டும்—என்று மஹாமஹோபாத்தியாயர்கிரிதரசர்மா அவர்கள் உருக்கமாகப்பிரஸ்தாபிக்க, தர்மப்பிராணன் ப்ரம்மஸ்ரீ திராவிட லெக்ஷ்மண சாஸ்திரிகள் அவர்களும் எல்லோரையும் வேண்டிக்கொள்ள, அக்கிராஸனம் வஹித்த வல்லபாசார்ய—ஸ்ரீயுத தாமோதரலால்ஜீ அவர்கள் இவ்வருஷத்திற்காகப் பதினாயிரம் ரூபாய் கொடுத்து அனுகிரஹத்தையும் ஆதாவையும் காட்டியதுமன்னியில் இனிமேல் வருஷந்தோறும் பதினாயிரம் ரூபாயின் வட்டியை கொடுப்பதாக வாக்களித்தார்கள். பிறகு மஹாஜனங்களுள், சிலர், 1001-ரூ யும், சிலர். -501-ரூ யும் சிலர் 101-ரூ யும் பலர் அவரவர்கள் சக்திக்கேற்றவாறும் கொடுத்தார்கள். சில கனவான்கள் தற்காலம் கொடுத்த ரூபாயை வருஷந்தோறும் கொடுப்பதாகவும் வாக்களித்தார்கள். மொத்தம் சேர்ந்த தொகை 50000 ரூ ஆயிற்று. பின்னிட்டும் பணம் வருமென்றும் சொல்லிக்கொள்ளப்பட்டது. இதோடு இரண்டாவதுநாள் நடவடிக்கை முடிந்தது. மூன்றுவது நாளிலும் விதவாவிவாஹம் முதலிய சில விஷயங்களைப்பற்றி விசாரம் நடந்து அவை சாஸ்திரத்தில் நிஷேதிக்கப்படுவதால்கூடாதென் றுதீர்மானிக்கப்பட்டன. பின்னும் தீண்டாமையைப்பற்றிய சில விசாரம் செய்வதற்காக நான்காவதுநாளும் ஸபை வைத்துக்கொள்ள வேண்டுமென்ற தீர்மானத்துடன் மூன்றுவதுநாள் நடவடிக்கை முடிந்தது. நான்காவது நாளில் நடந்தவிசாரம் மிகரஸமாயுள்ளது. (தொடரும்)

பத்திராதிபர்.

ஸ்ரீ: ॥

ஸ்ரீமதே வேங்கடநாயாய நம: ॥

சென்னைமாகாண வர்ணாசிரமதர்ம சங்கம்.

# ஆஹார நியமம்.

ஸநாதன தர்மாபிமானிகளே! ஆஸ்திகோத்தமர்களே! இப்பொழுது, புண்ணியபூமியாகிய இப்பாதகண்டத்தில் அரசாட்சி செலுத்திவரும் ஐரோப்பியர்களின் பாஷாபரிசயத்தினுலும், அவர்களின் ஸஹவாஸத்தினுலும், நமது ஹிந்து ஸஹோதரர்களில் சிலர் வெகு பிராசீனமாயும் அபௌருஷேயமாயுமிருக்கிற வேதத்தினுடையவும், ஸமுத்திரம் போல் அதிகப்பிரமாயும் விஸ்தாரமாயுமிருக்கிற அந்த வேதத்தின் வாஸ்த்தவார்த்தத்தை யோகமஹிமையினுலும் ஆசாரியர்களின் உபதேசத்தினுலும் நன்ருய் அறிந்து மந்த புத்திகளான நாம்அறியவேண்டிய தற்காக ஸ்மிருதி, இதிஹாஸ, புராண, கல்பஸூத்திரம் முதலியவைகளால் தெளிவாய் வெளிப்படுத்தி, பரமோபகாரம் செய்த மனு, வியாஸ, சுக, பராசரர் முதலிய மஹர்ஷிகளின் கிரந்தங்களினுடையவும், கருத்துக்களை நன்குணர்ந்து அதன்படி நடந்துவருகிற பெரியோர்களின் ஆசாராதிகளையும் அவைகளின் நோக்கங்களையும் பெரியோர்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளாமல், அக்ஷராப்யாஸம் ஆனது முதற்கொண்டே மேல்நாட்டார்களால் இயற்றப்பட்ட பாடபுஸ்தகங்களிலிருந்து கழுதை கொக்கு கோழி முதலியவைகளின் வரலாறுகளையும் பிறகு முறட்டுத்தனம் வஞ்சனை ஸ்திரீ சௌர்யம் போர்க்குணம் முதலிய தீக்குணங்களுக்கு ஆவாஸபூதர்களான சிற்சில வீரர்களின் சரித்திரங்களையும் படித்து மூளையைக் கெடுத்து நமது சாஸ்திரங்களின் வாஸனையைக் கிட்ட அணுகவொட்டாமல் செய்து கொண்டு சாஸ்திர ஸம்மதமான நமது வர்ணாசிரம தர்மாநுஷ்டானங்களைத் தங்களுக்குத் தோன்றிய குயுக்திகளால் ஆக்ஷேபிக்கிருர்கள். அவர்களின் ஆக்ஷேபணைகளாவது—.

ஈச்வரனுல் ஸ்ருஷ்டிக்கப்பட்ட மனிதர்கள் எல்லோரும் ஒரே மாதிரியான சரீர அமைப்புகளுடன் இருக்கையில், இவர்களில் சிலரை உயர்ந்தவர்கள் என்றும் சிலரைத் தாழ்ந்தவர்கள் என்றும் கருதுவதும் பிராஹ்மண, க்ஷத்திரிய, வைச்ய, சூத்திரர்கள், என்கிற பிரிவினைகளும் பிராமணர்கள் முதலியவர்களுக்குச் செய்ய

வேண்டியதாய் விதிக்கப் பட்டிருக்கும் வர்ணாசிரம தர்மங்களும்
தன்னலம் கருதும் சில மனிதர்களான பிராஹ்மணன் எனப்படு
வோர்களாலே ஏற்படுத்தப் பட்டதன்றி விஷமதிருஷ்டியும்பக்ஷ
பாதமும் அற்ற ஈச்வரனால் ஏற்படுத்தப் பட்டதல்லவென்றும்
இன்னும் இம்மாதிரியான அனேகவிதங்களான வேதசாஸ்திர
விருத்தமான தூராக்ஷேபங்களை ஒரு பிரமாணமும் இல்லாமல்
கேவலம் தங்கள் குயுக்தியை ஆதாரமாக வைத்துக் கொண்டே
செய்கிறார்கள். அவர்களின் ஆக்ஷேபங்களையும் அதற்கு நாம்
யுக்திக்கும் சாஸ்திரங்களுக்கும் ஸம்பந்தமாகச் சொல்லும் ஸமா
தானங்களையும் தனித்தனியாக எடுத்துரைப்பதாயிருந்தால் விஸ்
தாரப் படுமாகையாலும், இப்பொழுது எடுத்துக் கொள்ளப்பட்ட
ஆஹாரநியமம் என்னும் விஷயத்தைத்தவிர வேறு விஷயங்களில்
புகவேண்டி யிருக்குமாகையாலும் அவைகளுக்கு ஸங்கிரஹமாய்
பதில் சொல்லிவிட்டுப் பிரகிருதத்தில் எடுத்துக்கொண்ட ஆஹார
நியம விஷயமான உபந்யாஸத்தை ஆரம்பிக்கிறேன்.

மனிதர்களை விடத்தாழ்ந்ததான மிருகம் பக்ஷிமுதலியவை
களிலும் மரம் செடி முதலியவைகளிலும் அனேகவிதமான ஜா
திபேதங்களிருப்பதும் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே ஆஹா
ராதிகளும் ஸ்வபாவமும் வேறுபட்டிருப்பதும் ஈச்வரஸ்ருஷ்டியில்
பிரத்தியக்ஷ ஸித்தமாயிருப்பதற்குப் பூர்வபக்ஷிகள்யுக்தி மூலமான
காரணம் சொல்லுவார்களா! என் ஸமதிருஷ்டியானஈச்வரன்எல்லா
மிருகங்களையும் ஸிம்மமாகவாவது குதிரை, அல்லது பசுவாகவா
வது ஸிருஷ்டித்திருக்கக் கூடாது. இம்மாதிரியான வித்தியாஸங்
களுக்கெல்லாம் காரணம் ஈச்வரேச்சையையும் அல்லது ஜீவாசி
களின் பூர்வவினைகளையும் தவிர வேறெவ்விதக் காரணமும் இல்லை
யென்பதே வேதசாஸ்திரங்களில் நம்பிக்கையுள்ள ஆஸ்திகர்களான
நமது ஸித்தாந்தம். ஆகையால் ஈச்வரனால் அவர்களின் பூர்வஜன்
மகர்மாநு குணமாக பிராஹ்மணாதி ஜாதிகளில் பிறக்கும்படி
ஸ்ருஷ்டிக்கப்பட்ட மனிதர்கள், ஈச்வராபிமதத்தை நேரில்அறிந்து
கொண்டு அதன்படி நடக்க முடியாதவர்களாய் இருப்பதால்
நமக்குச் செவ்வையாய் அதைவெளியிடுகிற வேதத்தினுடையவும்
யோகமஹிமையினால்ஈச்வர ஸாக்ஷாத் காரம்செய்து வேதார்த்தங்
களையும் ஈச்வராபிமதத்தையும் அறிந்து அதை எல்லா ஜனங்க
ளும் ஸுலபமாய் அறியும்படி உபகரித்த மஹர்ஷிகளின் ஸ்மி

ருதிமுதலியவைகளுடையவும் கட்டளைப்படியே சாஸ்திரவச்யர் நடந்து தீரவேண்டும்.

श्रुतिस्मृत्युदितं धर्ममनुतिष्ठन् हि मानवः ।
इह कीर्तिमवाप्नोति प्रेत्य चानुत्तमं सुखम् ॥

"சுருதிஸ்மிருதிகளின் கட்டளைப்படி நடக்கும் மனிதனுக்கு இவ்வுலகில் நல்ல கீர்த்தியும் இறந்தபின் பரலோகத்தில் உத்தமமான சுகமும் கிடைக்கும்" என்று "மனு எதைச் சொன்னரோ அது தான் மருந்து" என்று கருத்தை வெளியிடும் வேதத்தில் கொண்டாடப்பட்ட மனு சொல்லுகிறபடியாலும் சுருதிஸ்மிருதிகளின் கட்டளைப்படி நடக்கத் தவறியவர்களைக் குறித்து,

श्रुतिस्मृतिर्ममैवाज्ञा यस्तामुल्लंध्य वर्तते ।
आज्ञाच्छेदी मम द्रोही मद्भक्तोऽपि न वैष्णवः ॥

"சுருதியும் அதினர்த்தத்தை விவரிக்கிற ஸ்மிருதியும் என்னுடைய உத்திரவு. அவைகளில் சொல்லப்பட்ட என்னுத்திரவுகளை மீறி நடக்கும் மனிதன் என்னிடத்தில் பக்தியுள்ளவனுகிலும் என் கட்டளையை மீறியகுற்றத்தினுல் அவன்என்னைச் சேர்ந்தவனல்லன்" என்று பகவான் தானே சொல்லுகிற படியாலும் ச்ருதி ஸ்மிருதிகளின் கட்டளையைத் தவறக் கூடாதென்றேற்படுகிறது' ஆகையுல் இந்தப் பாஞ்சபௌதிகமான சரீரம் சாகுமளவும் நிலைத்திருப்பதற்கு முக்கிய ஸாதனமான ஆஹாரவிஷயத்தில் ச்ருதி ஸ்மிருதிகளின் கட்டளை என்னஎன்பதை நாம் அறிய முயலவேண்டும்.

(தொடரும்) வே. ஸ்ரீநிவாஸ தாதாசாரியார்.

---

## வாரவிருத்தாந்தம்.

(இம்மகுடத்தின்கீழ் பிரதிவாரம்நடைபெறும் விசேஷங்களை தர்மநிலைக்கு மாறுதலின்றி நமது ஆர்யதர்மத்தில் எழுதும்படி ஸ்ரீமஹாஸன்னிதானத்தின்ஆக்ஞை. ஆதலின் இனி அவச்யமான ஸகல விஷயங்களும் தர்மவிரோதமின்றித் தோன்றும்.)

சென்ற வாரம் ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகள் அவர்கள் சென்னைக்கருகில் செங்கல்பட்டு தாலூகாவில் விஜயம்செய்ததால் இம்மையையே மோக்ஷமாகக் கருதிய பலர் ஸ்வஸ்வதர்மாசரணத்தைக் கைக்

கொண்டு ஆஸ்திகத்தை அவலம்பிக்கின்றனர். தை-மீ 12உ இரவு 8-மணிக்கு காஞ்சிமாநகரம் ஸ்ரீபகவத்பாதாளால் அலங்கரிக்கப்படப்போகிறது.

கோரக்ஷணமஹாஸபை:— 17, 18—1—31 திநங்களில் ஸ்ரீரங்கத்தில் அகில இந்திய ஜீவகாருண்ய மஹாநாடொன்று நடைபெற்றது. உபசரணைத்தலைவர் ஸர் டி. தேசிகாசாரியார் தனது உபந்யாஸத்தில் கோஸம்ரக்ஷணத்தைப்பற்றி வற்புறுத்திப் பேசினர். கோக்கள் நன்மை பெறின் நாடு சுகம் பெறுமென நமது பெரியோர் கருதி, மாட்டுப்பொங்கலென புதுவருஷத்தில் கோபூஜை செய்வதுமாத்திரமின்றி பிரதி திநமும் அதை தர்மமென அனுஷ்டித்தனர். தற்சமயம் காபியின் பாலுக்காக பசு என மதிப்பதால் தோலில் வைக்கலடைத்த கன்றுகள் பல நகரங்களில் நடமாடுகின்றன. கன்றில்லாப் பசுவின் பாலையருந்தும் தோஷத்தால் பல வியாதிகள் நம்மைக் கவர்கின்றன.

விவாஹம்:— ரோம்நகரிலுள்ள போப்பரசரென்பார், தற்கால விவாஹமுறையைக் கண்டித்து நமது நாட்டு விவாஹம்போன்ற விவாஹத்தை ஆதரித்து தம் மக்களுக்கோர் ஸ்ரீமுகம் அனுப்பியிருக்கின்றனர். நம்மவரோ பலவகையிலும் அநர்ஹமான மேனாட்டு விவாஹரீதியை ஆதரிக்கின்றனர். "இறந்தாலும் ஸ்வதர்மம் மேலானது" என்பதை உணரும் நாளே நன்னாளாம்.

தியாகய்யர் திநம்:—தமிழ்நாட்டில் ஸ்ரீராமபக்தரான தியாகய்யர்வாள்திநம் சிறப்பாக பலவிடங்களில் கொண்டாடப்பட்டது. தற்கால ஸங்கீத கோஷ்டிகள் அவரைப்போல் பக்தியுடன் சுத்தமான வாழ்வைக் கைக்கொள்ளல் நலம.

ஸ்திரீகளும் அரசியலும்:— அரசியற் போராட்டத்தில் பல்லாயிரக்கணக்கான பாரதமக்கள் துப்பாக்கித் தடியடி காராக்ருஹம் முதலியவைகளை தேசபக்தி மேலீட்டால் அனுபவித்துவருவது அறிந்த விஷயமே. சில பெண்மக்களும் இதில் கலந்து படும் துன்பத்தைக் காணும் எவர் மநந்தான் கரையாது? போதிய புருஷர்கள் முன்வாராததால் அவர்கள் இம்முடிவிற்கு வந்ததாகத் தோன்றுகிறது. பாதிவ்ருத்யம் முதலிய முக்ய தர்மங்களுக்குக் குறைவு வாராமல் பாதுகாப்பது நம் கடமையாகும்.

ஸ்ரீவத்ஸ. வெ. ஸோமதேவசர்மா.